மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

முன்னிலை – செல்வி. அ. இலக்கியா, பி.பி.ஏ., எல்எல்.பி.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தூர்
2025 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 09 ம் நாள் சனிக்கிழமை
இடைநிலை மனு எண்.05/2024
இன்
அசல் வழக்கு எண்.90/2021
-------

A. ஆறுமுகம் .. மனுதாரர்/வாதி

/எதிர்/

1. சோமநாதன்
2. S. வெள்ளைத்தாய்
3. R. ஜெயலட்சுமி . . எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனுவானது இறுதியாக என் முன்பாக 30.07.2025 அன்று விசாரணைக்காக வந்த போது மனுதாரர்/வாதிதரப்பில் வழக்கறிஞர் திரு. M. இப்ராகிம் பாபு, அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. G. பிரசன்னகுமார், அவர்கள் ஆஜராகியும், 3 ம் எதிர்மனுதாரர் அழைத்தும் ஆஜராகாத காரணத்தால் தோன்றாத் தரப்பினராக இருந்து வரும் நிலையிலும், இருதரப்பிலும் நிகழ்த்திய வாதுரை, மனு, அபிடவிட்டு, எதிருரை ஆகியவற்றைப் பரிசீலித்தும் இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்,

**உத்தரவு**

இந்த மனுவானது 01.11.2023 ம் தேதி தள்ளுபடியான வழக்கினை மீண்டும் கோப்பிற்கு எடுக்க உத்தரவிட வேண்டி கட்டளை 9 விதி 9 உரிமையியல் நடைமுறை சட்டத்தின் கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர்/வாதி தரப்பு மனுவின் சுருக்கம்**–

**2.1.** மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் வாதி. மேற்படி வழக்கு விசாரணைக்காக பட்டியலிடப்பட்டது. ஷை தேதிக்கு முன்பாகவே மனுதாரர்

மேட்டுப்பட்டி கிராமத்திலிருந்து வேலை முடிந்து இரவு சுமார் 09.00 மணியளவில் இருசக்கர வாகனத்தில் வீடு திரும்பிக் கொண்டிருந்த சமயத்தில் எதிரில் அதிவேகமாக வந்த இளைஞர் என் இருசக்கர வாகனத்தில் மோதிவிட்டார். அதில் நிலைதடுமாறி கீழே விழுந்ததில் மனுதாரரின் காலிலும், தலையிலும் பலத்த அடிப்பட்டது. மனுதாரரால் எழுந்திருக்க இயலாத நிலையில் சம்பவ இடத்திலேயே படுத்து கிடந்துள்ளார். அவ்வழியாக வந்த வேறு நபர்கள் மனுதாரருக்கு உதவி செய்து மருத்துவமனையில் சேர்த்தனர்.

**2.2.** சிகிச்சைக்கு பின் வீடு திரும்பியதும் மருத்துவர் ஓய்வில் இருக்குமாறு பரிந்துரைத்ததன் பேரில் ஓய்வில் இருந்துள்ளார். அது குறித்து மனுதாரரின் வழக்கறிஞர் தகவல் தெரிவித்து ஷை விபரம் கூறி ஷை வழக்கை ஒத்தி வைக்க மனு செய்துள்ளார். அதன்பின்பும் மனுதாரரின் உடல்நிலை சீராகவில்லை. அதனால் 01.11.2023ம் தேதியன்று மனுதாரரால் விசாரணைக்கு ஆஜராக இயலவில்லை. அதனால் மனுதாரருக்கு எதிராக வழக்கு ஷை தேதியில் தள்ளுபடியாகிவிட்டது. ஷை காரணங்களினாலும், வயோதிகத்தாலும் மற்றும் வருகையின்மையின் காரணத்தாலும் 01.11.2023ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்ட வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுக்க கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். ஷை வழக்கில் மனுதாரருக்கு நல்ல கட்சி உள்ளது. இம்மனு அனுமதிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். இ,ல்லாவிடில் மனுதாரருக்கு ஏராளனமான கஷ்ட நஷ்டம் ஏற்படக்கூடும். எனவே மனுதாக்கல்.

3. **<u>1, 2 எதிர்மனுதாரர்கள்/2ம் பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட ஆட்சேபணையின் சுருக்கம் –</u>**

3.1. மனுதாரர் தாக்கல் செய்திருக்கும் மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. இதனடியில் தெளிவாய் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகள் தவிர ஏனைய சங்கதிகள் யாவும் 1, 2 எதிர்மனுதாரர்களால் ஆட்சேபிக்கப்படுகின்றன. அவை எல்லாவற்றையும் மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். மேற்படி

வழக்கானது விசாரணைக்காக கடந்த 21.09.2023, 22.09.2023, 25.09.2023, 06.10.2023, 13.10.2023, 18.10.2023 ஆகிய தேதிகள் மனுதாரருக்கு மேற்படி வழக்கை நடத்த சுமார் 6 முறை கால அவகாசம் கொடுத்தும் வழக்கை நடத்தவில்லை. வேண்டுமென்றே மேற்படி வழக்கை நடத்தாமல் விட்டுவிட்டு தற்போது தள்ளுபடியான வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுத்து மேல் நடத்த வேண்டி தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல. எனவே மனுதாரரின் மனுவை 1, 2 எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்படுகிறது.

**4.** மனுதாரர் மனுவில் கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத் தக்கதா?

**5.** மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எந்த சாட்சியும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப் படவில்லை.

**6. __தீர்வு__**

6.**1.** மனு பரிசீலிக்கப்பட்டது. மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் வாதி. மனுதாரர்/வாதி 01.11.2023ம் தேதி தள்ளுபடியான வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுத்து மேல்நடத்த உத்தரவிடவேண்டி தாக்கல் செய்துள்ள மனுவிற்கு மனுதாரர் கூறும் காரணம் என்னவென்றால், மனுதாரர் மேட்டுப்பட்டி கிராமத்திலிருந்து வேலை முடிந்து இரவு சுமார் 09.00 மணியளவில் இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தபோது எதிரில் அதிவேகமாக வந்த இளைஞர் மனுதாரரின் இரு சக்கர வாகனத்தில் மோதி அவர் நிலைதடுமாறி கீழே விழுந்ததில் அவருக்கு காலிலும், தலையிலும் பலத்த காயம் ஏற்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார் என்றும், சிகிச்சைக்கு பின்னர் மருத்துவர் ஓய்வில் இருக்கும்படி அறிவுறுத்தியதன் பேரில் ஓய்வில் இருந்தும் உடல் நிலை சீராகவில்லை. எனவே மனுதாரரின் வயோதிகம், வருகையின்மையாலும் அன்றைய தினம் தள்ளுபடி செய்யப்பட்ட உத்தரவை ரத்து செய்து வழக்கை கோப்பிற்கு எடுத்து மேல் நடத்த உத்தரவிட வேண்டி இந்த மனு தாக்கல்.

**6.2.** எதிர்மனுதாரர்கள் தங்களுடைய ஆட்சேபணையில் கடந்த 21.09.2023, 22.09.2023, 25.09.2023, 06.10.2023, 13.10.2023, 18.10.2023 ஆகிய தேதிகளில் கால அவகாசம் வழங்கியும் வழக்கை மேல்நடத்தவில்லை. வேண்டுமென்றே வழக்கை நடத்தாமல் விட்டுவிட்டு தற்போது தள்ளுபடியான வழக்கை மேல் நடத்த உத்தரவிட வேண்டும் என கூறுவது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. எனவே மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்பட்டுள்ளது.

**6.3.** மனுதாரருக்கு விபத்து ஏற்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்ததாகவும், சிகிச்சைக்கு பின்பு மருத்துவர் ஓய்வில் இருக்க வேண்டுமென்று பரிந்துரை செய்ததன் பேரில் ஓய்வில் இருந்து வந்ததாகவும் கூறியுள்ள நிலையில், அதற்குரிய ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்ற போதிலும், மனுதாரின் வயோதிகத்தை கருத்தில் கொண்டும், மனுதாரரின் உடல்நிலையை கருத்தில் கொண்டும், வழக்கின் சூழ்நிலை மற்றும் சங்கதிகளை கருத்தில் கொண்டு மனுதாரருக்கு ஒரு வாய்ப்பளிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இந்நீதிமன்றம் கருதுவதால் 01.11.2023 ம் தேதி தள்ளுபடியான வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுத்து மேல் நடத்த உத்தரவிட வேண்டி தாக்கல் செய்துள்ள இந்த மனு பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என தீர்வு காணப்படுகிறது.

**7. இறுதி முடிவு–**

இறுதியாக, இந்த மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக கூறப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, **2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 09–ம்** நாள் கையொப்பமிட்டு, இந்நீதிமன்றத்தால் அவையறிய பகரப்பட்டது.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்</u>**

இல்லை.

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்</u>**

இல்லை.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
சாத்துார்
இ.ம.எண்.05/2024
இன்
அ.வ.எண்.90/2021
**உத்தரவு**
நாள்–09.08.2025.